**P.L.RAJ IAS & IPS ACADEMY**
**Building Bureaucrats Since 2006**

# June 7, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நார்வே செஸ் போட்டியின் இறுதிச் சுற்றில் சிறப்பாக ஆடிய இந்திய வீரர் பிரக்ஞானந்தா சாம்பியன் பட்டத்தை வசப்படுத்தினார். இதன் மூலம் கௌரவ மிக்க இப்போட்டியில் பட்டம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற சிறப்பைப் பெற்றார்.

(i) நார்வே நாட்டின் தலைநகர் ஆஸ்லோவில் தலைசிறந்த செஸ் வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற நார்வே செஸ் போட்டிநடைபெற்றது. இதில் பங்கேற்று ஆடுவது மிகவும் பெருமை மிக்கதாகும்.

(ii) இந்நிலையில் இந்திய கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா கடைசி சுற்றில் ஜெர்மனியின் வின்சென்ட் கீய்மரை எதிர்த்து ஆடினார். 10-ஆவது சுற்றில் கீய்மரை வெள்ளை நிறக் காய்களுடன் ஆடிய பிரக்ஞானந்தா முழுமையாக வீழ்த்தினார். இந்த வெற்றியால் 3 புள்ளிகளை ஈட்டிய பிரக்ஞானந்தா மொத்தம் 18 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறி சாம்பியன் பட்டத்தை வசப்படுத்தினார்.

(iii) பட்டியலில் முதலிடத்தில் இருந்த அமெரிக்க வீரர் வெஸ்லி ஸோ எதிராளி அலிரேஸா பிரௌஸ்ஜாவுக்கு எதிரான ஆட்டத்தில் டிரா கண்டார். வெஸ்லி இரண்டாம் இடமும், அலிரேஸா மூன்றாம் இடமும் பெற்றனர்.

(iv) உலகின் நம்பர் 1 வீரர் நார்வேயின் மாக்னஸ் கார்ல்ஸன் கடைசி சுற்றில் உலக சாம்பியன் இந்தியாவின் டி குகேஷை வீழ்த்தினார்.

(v) மகளிர் பிரிவில் பிபிசாரா அஸ்ஸாபவேயா நடப்பு உலக சாம்பியன் ஜு வென்ஜுனுக்கு எதிராக ஆடிய ஆட்டத்தில் தோல்வி கண்டார். எனினும் புள்ளிகள் அடிப்படையில் பிபிசாரா பட்டம் வென்றார். ஸு ஜினேர் இந்திய வீராங்கனை கொனேரு ஹம்பியை வீழ்த்தி இரண்டாம் இடம்பெற்றார்.

(vi) அன்னா முஷிசுக் உலகக் கோப்பை சாம்பியனான இந்தியாவின் திவ்யா தேஷ்முக்கை வீழ்த்தினார். பிபிசாரா 16.5 புள்ளிகள், ஸு ஜினேர் 16 புள்ளிகள், அன்னா முஷிசுக் 15 புள்ளிகளை ஈட்டினர்.

2.வீடுகளில் பயன்படுத்தப்படும் 14.2 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.29 அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விலை உயர்வு ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 7) முதல் அமலுக்கு வருகிறது.

(i) சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துவருவதால் அரசுக்குச் சொந்தமான பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் திணறி வருகின்றன. இதன் காரணமாக, கடந்த 3 மாதங்களில் இரண்டாவது முறையாக வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை உயர்த்தி பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்தன.

(ii) இதன்படி, வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை சென்னையில் ரூ.928.5-இல் இருந்து ரூ.957.5-ஆகவும், தில்லியில் ரூ.913- இல் இருந்து ரூ.942-ஆகவும் அதிகரித்துள்ளது.

(iii) அமெரிக்கா-ஈரான் இடையே மேற்காசியாவில் ஏற்பட்ட போர் காரணமாக, உலக அளவில் எரிசக்தி விநியோகத்தில் இடர்ப்பாடு ஏற்பட்டு, சர்வதேச அளவில் எரிபொருள் விலை அதிகரித்தது. இதையடுத்து கடந்த மார்ச் 7-ஆம் தேதி வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.60 அதிகரிக்கப்பட்டது. தற்போது இரண்டாவது முறையாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

(iv) முன்னதாக, கடந்த மே மாத மத்தியில் இருந்து பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ.7.50 வரையும், கார், ஆட்டோக்களில் பயன்படுத்தப்ப டும் சிஎன்ஜி எரிவாயு விலை கிலோ வுக்கு சுமார் ரூ.6 வரையும் உயர்த்தப்பட்டது.

3. சீனா-தைவான் இடையே அரசியல் ரீதியாக கடும் பதற்றம் நிலவி வரும் சூழலில், இரு நாடுகளும் 12 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக விலங்குகள் பரிமாற்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

(i) சீனாவின் ஃபுஜியான் மாகாணத் திலிருந்து அரிய மற்றும் அழிந்து வரும் இனத்தைச் சேர்ந்த 2 சிவப்பு பாண்டா கரடிகள் தைவான் தலைநகர் தைபேயில் உள்ள பூங்காவுக்கு கொண்டு வரப்பட்டன.

(ii) இந்தப் பரஸ்பர பரிமாற்றத்தின் ஒரு பகுதியாக, தைவான் தரப்பி லிருந்து அரிய வெள்ளை நிற கிப்பன் குரங்குகள் சீனாவின் ஷாங்காய் நகருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. இதற்கு முன்னதாக, கடந்த 2014-இல் சீனாவிடமிருந்து சிவப்பு பாண்டாக்களை தைவான் பெற்றிருந்தது குறிப்பிடத் தக்கது.

(iii) தைவானைத் தனது நாட்டின் ஒரு பகுதி என சீனா உரிமை கொண்டாடி வருவதால் இரு நாட்டு அரசுகளுக்கு இடையே ராஜீய தொடர்புகள் முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளன.

4. தென்கிழக்கு ஐரோப்பிய நாடான கொசோவோ மற்றும் மேற்கு ஆசிய நாடான ஆர்மீனியாவில் நாடாளுமன்றத் தேர்தல் ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 7) நடைபெறுகிறது.

(i) கொசோவோவில் கடந்த 18 மாதங்களில் 3-ஆவது முறையாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுகிறது.

(ii)முன்னாள் அதிபர் வியோசா உஸ்மானியாவின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்த நிலையில், புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதில் ஆளுங் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இத்தேர்தல் முன்கூட்டியே நடைபெறுகிறது.

(iii) ஆளுங்கூட்டணிக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை (66 இடங்கள்) இருந்தாலும், அதிபரைத்தேர்வு செய்யத் தேவையான 80 எம்.பி.க்களின் (மொத்த 120 இடங்களில் மூன்றில் 2 பங்கு) ஆதரவு இல்லாததால் மீண்டும் ஒரு தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

(iv) ஆர்மீனியாவில் அந்நாட்டின் எதிர்கால புவிசார் அரசியலையும்; சர்வதேச உறவுகளையும் தீர்மானிக்கும் மிக முக்கிய நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுகிறது.

(v) தற்போதைய பிரதமர் நிகோல் பாஷின்யன், ரஷியாவுடனான நீண்டகால உறவைக் காட்டிலும் ஐரோப்பிய யூனியன் மற்றும் அமெரிக்காவுடன் உறவை

ஏற்படுத்த முயன்று வருகிறார். எதிர்க் கட்சிகள் இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றன.

(vi) ஆர்மீனியாவின் பகுதிகளை அஜர்பைஜான் கைப்பற்றிய போது ரஷியா தங்களுக்கு உதவவில்லை என்று ஆர்மீனிய மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். அதேபோல், ரஷியா பொருளாதார ரீதியாக ஆர்மீனியாவுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளது. இத்தகைய சூழலில் நடக்கும் இத்தேர்தலில் ஆளுங்கட்சியே மீண்டும் ஆட்சியைத் தக்க வைக்க வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

(vii) தென் அமெரிக்க நாடான பெருவில் அதிபர் தேர்தலின் இறுதிக்கட்ட (2-ஆம்கட்ட) வாக்குப்பதிவு நடைபெறுகிறது. கடந்த ஏப்ரலில் நடந்த முதல்கட்ட தேர்தலில் யாரும் பெரும்பான்மை பெறாததால், வலதுசாரி வேட்பாளர் கெய்கோ ஃபுஜிமோரி, இடதுசாரி வேட்பாளர் ராபர்டோ சான்செஸ் ஆகிய இருவருக்கு இடையே போட்டி நிலவுகிறது.

(viii) கடந்த 10 ஆண்டுகளில் 8 அதிபர்களைக் கண்ட பெருவில், இத்தேர்தலிலும் முறைகேடு புகார்கள் எழுந்துள்ளதால், இறுதி முடிவுகள் வெளியாக இன்னும் ஒரு மாதம் ஆகலாம் என அந்நாட்டுத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

5. கடந்த மார்ச் மாதத்துடன் 2025-26 நிதியாண்டில், இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு (எஃப்டிஐ) 18 சதவீதம் அதிகரித்து, 5,884 கோடி டாலரை எட்டியுள்ளது.

(i) மத்திய தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் தரவுகளின்படி, 2025-26 நிதியாண்டின் ஜனவரி- மார்ச் காலாண்டில் மட்டும் முதலீடு 17.5 சதவீதம் அதிகரித்து, 1,090 கோடி டாலராகப் பதிவாகியுள்ளது.

(ii) அதேபோல் 2025-26 முழு நிதியாண்டில், அமெரிக்காவில் இருந்து வந்த முதலீடுகள் முந்தைய 2024-25 நிதியாண்டைவிட இருமடங்காக அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. 2024-25 நிதியாண்டில் 545 கோடி டாலராக இருந்த அமெரிக்க முதலீடு, மதிப்பீட்டு ஆண்டில் 1,117 கோடி டாலராக அதிகரித்துள்ளது.

(iii) அந்நிய நேரடி முதலீட்டின் ஒட்டுமொத்த நிலவரத்தை நோக்கும்போது, முதலீட்டு பங்குகள், மறுமுதலீடு செய்யப்பட்ட வருவாய் மற்றும் பிற மூலதனங்களுடன் சேர்த்து மொத்தம் 9,450 கோடி டாலராக உள்ளது. இது முந்தைய 2024-25 நிதியாண்டை விட 17 சதவீதம் அதிகமாகும்.

(iv) சிங்கப்பூரின் ஆதிக்கம்:

- அந்நிய முதலீட்டில் பங்காற்றிய நாடுகளின் பட்டியலில் சிங்கப்பூர் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. சிங்கப்பூரில் இருந்து மட்டும் 1,980 கோடி டாலர் முதலீடு கிடைத்துள்ளது.
- அமெரிக்கா, மோரீஷஸ் (657 கோடி டாலர்), ஜப்பான் (374 கோடி டாலர்), நெதர்லாந்து (337 கோடி டாலர்) ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

(v) துறை வாரியாக...:

- கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் துறை 1,394 கோடி டாலர் முதலீட்டை ஈட்டி முதலிடத்தில் உள்ளது. சேவை, வர்த்தகத் துறைகளும் குறிப்பிடத்தக்க அளவில் (முறையே 1,000 கோடி டாலர், 400 கோடி டாலர்)

முதலீடுகளை ஈர்த்துள்ளதாக அரசு தரவுகள் தெரிவிக்கின்றன.

(vi) மாநிலம் வாரியாக...:

- மகாராஷ்டிரம் 1,841 கோடி டாலர் முதலீட்டுடன் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்தபடியாக கர்நாடகம் 1,293 கோடி டாலர் முதலீட்டுடன் 2-ஆம் இடத்திலும், குஜராத் 571 கோடி டாலர் முதலீட்டுடன் 3-ஆம் இடத்திலும் உள்ளன.

6. மங்கோலிய தலைநகர் உலன்படாரில் நடைபெற்ற ஆசிய தனிநபர் செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் சவிதா ஸ்ரீ பாஸ்கர். சென்னையைச் சேர்ந்த சவிதா 2027 ஃபிடே மகளிர் உலகக் கோப்பைக்கும் தகுதி பெற்றார்.

7. பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் பந்தயம் மகளிர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றார் ரஷியாவின் மிர்ரா ஆன்ட்ரீவா. இது அவர் வென்ற முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம்ஆகும்.

(i) இந்த சீசனின் இரண்டாம் கிராண்ட் ஸ்லாமான பிரெஞ்சு ஓபன் பாரீஸ் நகரில் நடைபெற்று வருகிறது.

(ii) கடந்த 1992-இல் மோனிகா செலஸ் 18 வயதில் பிரெஞ்சு ஓபன் பட்டம் வென்றிருந்தார். அவருக்கு பின் 19 வயதில் பட்டம் வென்ற இரண்டாவது இளம் வீராங்கனை என்ற பெருமை மிர்ராவுக்கு கிட்டியது. மேலும் 2005-ஆம் ஆண்டுக்குபின் பிறந்து கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற முதல் நபர் என்ற சிறப்பும் சேர்ந்துள்ளது.

8.சமையல் எண்ணெய் நிறுவனங்கள் இனி ஒரே மாதிரியான பேக்கேஜிங் அளவுகளை கட்டாயம் பின்பற்ற மத்திய அரசு உத்தரவிட்டது.

(i) பல்வேறு நிறுவனங்களால் விற்பனை செய்யப்படும் சமையல் எண்ணெய் விலையை ஒப்பிட்டு நுகர்வோர் எளிதாக வாங்கும் நோக்கில் இதற்கான விதிகளை மத்திய நுகர்வோர் துறை வெளியிட்டுள்ளது. இதுகுறித்து நுகர்வோர் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

- 200 மில்லி லிட்டர்/கிராம், 500 மில்லி லிட்டர்/கிராம், 1 லிட்டர்/கிலோ, 2 லிட்டர்/கிலோ, 3 லிட்டர்/கிலோ, 4 லிட்டர்/கிலோ, 5 லிட்டர்/கிலோ, 15 லிட்டர்/கிலோ மற்றும் 20 லிட்டர்/கிலோ ஆகிய 9 வகையான பேக்கேஜிங் அளவுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
- பனை, சூரியகாந்தி, நிலக்கடலை, கடுகு, மக்காச் சோளம் உள்ளிட்டவை மூலம் சமையல் எண்ணெய்யை தயாரிக்கும் நிறுவனங்கள் இந்த அளவைப் பின்பற்றி இனி பேக்கேஜிங் செய்யவுள்ளன.
- 200 மில்லி லிட்டர் அல்லது 200 கிராமுக்கு குறைவான அளவைக் கொண்ட சமையல் எண்ணெய் பேக்கேஜிங் முறைக்கு இந்த விதியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. குறைந்த விலையில் இந்த வகையான சமையல் எண்ணெய் கிடைப்பதை உறுதி செய்ய விலக்களிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மட்டுமன்றி வெளிநாட்டிலிருந்து சமையல் எண்ணெய்யை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கும் இந்த அளவுகோல் பொருந்தும். அடுத்த 3 மாதங்களுக்குள் அனைத்து நிறுவனங்களும் இதைப் பின்பற்ற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

9.உலகளாவிய நெருக்கடிக்கு மத்தியில் நாட்டின் வளர்ச்சியை மேலும் விரைவுபடுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தனது பொருளாதார ஆலோசனைக் குழுவுடன் (இஏசி) பிரதமர் நரேந்திர மோடி முக்கிய ஆலோசனை மேற்கொண்டார்.

(i) மேற்காசியப் போரின் தாக்கங்கள், இந்தியா உள்பட உலகின் பல்வேறு நாடுகளில் எதிரொலித்து வரும் சூழலில், இந்த ஆலோசனைக் கூட்டம் நடை பெற்றுள்ளது. பொருளாதார ஆலோசனைக் குழு என்பது பொருளாதாரம் சார்ந்த விவகாரங்களில் மத்திய அரசுக்கு குறிப்பாக பிரதமருக்கு ஆலோசனைகளை வழங்கும் சுதந்திரமான அமைப்பாகும்.

(ii) எஸ்.மகேந்திர தேவ் தலைமையிலான இக்குழுவில் சஞ்சய் குமார் மிஸ்ரா, சஞ்சீவ் சன்யால், ஷாமிகா ரவி ஆகிய மூன்று முழு நேர உறுப்பினர்களும், ராகேஷ் மோகன், சஜ்ஜித் சினோய், நீல்காந்த் மிஸ்ரா, நீலேஷ்ஷா, டி.டி. ராம் மோகன், சௌம்யா காந்தி கோஷ், கே.வி.ராஜு, சேத்தன் காடே, பாமி துவா, புலக் கோஷ், கௌரவ் வல்லப் ஆகிய 11 பகுதிநேர உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர்.

(iii) பிரதமரால் பரிந்துரைக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த அல்லது பிற விவகாரங்கள் குறித்து பகுப்பாய்வு செய்து, அவருக்கு ஆலோசனைகள் வழங்குதல், பேரியல் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களில் தங்களின் கருத்துகளை பிரதமரிடம் தெரிவித்தல் உள்ளிட்டவை இக்குழுவின் பணி வரம்புகளில் அடங்கும்.

(iv) தாமாக முன்வந்தும் பிரதமருக்கு இக்குழு ஆலோசனை வழங்க முடியும். பொருளாதாரம் சார்ந்து அவ்வப்போது பிரதமரால் வழங்கப்படும் பணிகளை மேற்கொள்வதும் குழுவின் பொறுப்பாகும்.

10.தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்ட தகவலின்படி, இந்தியப் பொருளாதாரம் கடந்த 2025-26 நிதியாண்டின் 4-ஆம் காலாண்டில் (ஜனவரி-மார்ச்) 7.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இது, முந்தைய காலாண்டை (8%) காட்டிலும் சற்று குறைவாகும்.

(i) அதேநேரம், 2025-26 முழு நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 7.7 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2024-25-ஆம் நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 7.1 சதவீதமாக இருந்தது. உற்பத்தி மற்றும் சேவைத் துறையின் சிறப்பான செயல்பாடுகளே இந்த வளர்ச்சிக்கு முக்கியக் காரணிகளாக அமைந்தன.

(ii) சில மாதங்களாக நீடித்துவரும் மேற்காசியப் போரின் பின்னணியில், உலகளாவிய ஸ்திரமின்மை மற்றும் எரிபொருள் விலை உயர்வால் நடப்பாண்டில் பொருளாதார வளர்ச்சி மிதமாகவே இருக்கும் துறைசார் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

(iii) இந்த சவால்களைக் கருத்தில்கொண்டு, நடப்பு 2026-27 நிதியாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி கணிப்பை ரிசர்வ் வங்கி 6.6 சதவீதமாக குறைத்துள்ளது. முன்பு 6.9 சதவீதமாக கணிக்கப்பட்டிருந்தது.

11.ஐ.நா.பொதுச் சபையில் ஜம்மு-காஷ்மீர் விவகாரம் குறித்து போலியான பிம்பங்களைக் கட்டமைக்க முயல்வதாக பாகிஸ்தானுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்தது.

(i) மேலும், ஜம்மு-காஷ்மீர் இந்தியாவின் யூனியன் பிரதேசம் என்றும், அது தங்களின் உள்நாட்டு விவகாரம் என்றும் ஐ.நா.வுக்கான நிரந்தர இந்திய தூதர் பர்வதனேனி ஹரீஷ் பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுத்தார்.

(ii) ஐ.நா.பொதுச் சபையில் நடைபெற்ற ஆண்டறிக்கை சமர்ப்பிப்பு நிகழ்வின்போது ஜம்மு-காஷ்மீர் விவகாரத்தை ஐ.நா.வுக்கான பாகிஸ்தான் நிரந்தர தூதர் அசீம் இஃப்திகார் எழுப்பினார். இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து பர்வதனேனி ஹரீஷ் பேசியதாவது:

- ஐ.நா.அமைப்பில் தங்களின் பிரிவினைவாத அரசியல் கொள்கைகளை பாகிஸ்தான் திணிக்க முயல்கிறது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தற்போது தற்காலிக உறுப்பின ராக இருக்கும் பாகிஸ்தான் தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துகிறது. ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் தற்காலிக உறுப்பினர் பதவி என்பது மிகப்பெரும் பொறுப்பு. அது போலியான ஒருசார்பான பிம்பங்களைக் கட்டமைக்கும் இடமல்ல; இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியான ஜம்மு-காஷ்மீர் குறித்து பாகிஸ்தான் சுமத்தும் அனைத்துக் குற்றச்சாட்டுகளும் அடிப்படை ஆதாரமற்றவை. இங்கு பாகிஸ்தான் எழுப்பும் வெற்று முழங்கங்களால் பயனில்லை.
- இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சமகால மற்றும் எதிர்கால சர்வதேச புவி அரசியல் சவால்கள் குறித்து விவாதிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
- தற்போதைய ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலின் கட்டமைப்பு 1945- ஆம் ஆண்டு காலகட்டத்துக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டது. 1960- களில் இங்கு தற்காலிக உறுப்பினர்களைச் சேர்ப்பது தொடர்பான சீர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஐ.நா.வின் செயல்பாடுகளில் பெருமளவில் மாற்றங்கள் ஏற்படவில்லை.
- எனவே, தற்காலத்துக்கு ஏற்ப ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர மற்றும் தற்காலிக உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்தால் மட்டுமே உண்மையான சீர்திருத்தத்தை மேற்கொள்ள முடியும் என்றார்.
- தற்போது ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் மொத்தம் 15 உறுப்பு நாடுகள் உள்ளன. சீனா, பிரான்ஸ், ரஷியா, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய 5 நாடுகளுக்கு மட்டுமே நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 10 உறுப்பு நாடுகள் சுழற்சி முறையில் 2 ஆண்டுகளுக்கு தற்காலிக உறுப்பினர்களாக செயல்பட்டு வருகின்றன.
- இதில் சீர்திருத்தம் மேற்கொண்டு நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கையை 11-ஆகவும், தற்காலிக உறுப்பினர்களின் எண்ணிக்கையை 15 அல்லது 16-ஆகவும் உயர்த்தி மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை 25 அல்லது 26-ஆக உயர்த்த ஜி4 நாடுகளான இந்தியா, பிரேஸில், ஜெர்மனி மற்றும் ஜப்பான் நீண்டகாலமாக வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.